## உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட வரவேற்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2015

மேலே குறிப்பிடப்பட்ட சேவையிலுள்ள அலுவலகர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை 2015ஆம் ஆண்டு ஜுலை மாதம் கொழும்பில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதற்காக இவ்வமைச்சின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு தற்போது மாவட்டச் செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் சேவையாற்றுகின்ற, முதலாவது திணைக்களப் பரீட்சையைப் பூர்த்தி செய்யாத, வரவேற்பு உத்தியோகத்தர்கள் தரம் III அலுவலகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பாடத்திட்டம்:**

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| அலுவலக முறைமைகள் | அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைமைகள் தொடர்பான அடிப்படை அறிவினையும் அவ்வறிவினை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தத்தக்க ஆற்றலும் பரிசீலிக்கப்படும்.<br><br>தாபனவிதிக்கோவையிலுள்ள கீழே காட்டப்பட்டுள்ள அத்தியாயங்களை உள்ளடக்கி அலுவலக முகாமைத்துவத்தின் போது முக்கியம் பெறுகின்ற தாபன நடவடிக்கைகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வகையில், தாபனவிதிக்கோவையின் Iஆம் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.<br><br>அத்தியாயம் I பொது<br>அத்தியாயம் II ஆட்சேர்ப்புத் திட்டங்களும் நியமிப்புக்களும்<br>அத்தியாயம் IV மாதச் சம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தரத் தகுதிநிலை, ஓய்வூதிய உரிமை ஆகியவற்றை வழங்கல்.<br>அத்தியாயம் V விடுவித்தல், முன்னர் வகித்த விடுவித்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், சேவையை<br>முடிவுறுததுதல்<br>அத்தியாயம் VII சம்பளங்கள்<br>அத்தியாயம் XV கற்கை, பயிற்சி அல்லது கடமையின் நிமித்தம் வெளிநாடு செல்லல்<br>அத்தியாயம் XXVII தொடர்பிணைப்பு வழி |
| கணக்கு நடவடிக்கைகள் | பதவிகளுக்கு உரித்தான வகையில் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை கணக்குகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு பதிவேடுகளது நடவடிக்கைகள் தொடர்பான விளக்கத்தினையும் அறிவினையும் மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிதிப்பிரமாணத்தின் Iஆம் பகுதி தொடக்கம் Vஆம் பகுதி வரையான பகுதி கருத்திற் கொள்ளப்படும். |

02. **மொழி மூலம்:** மொழி மூலமானது, அலுவலர் அரச சேவையில் இணைவதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலமாகவோ அல்லது அரசகரும மொழி மூலமாகவோ இருத்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பிக்கின்ற மொழிமூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகள் தமக்கு உரியதல்லாத மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றினார்கள் என பின்னர் தெரியவருமிடத்து, அவர்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

03. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:-**
இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமையத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015 ஜூலை மாதம் 19ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவருடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரேஷ்ட உதவிச் செயலாளர் (மாவட்ட நிர்வாகம்),

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

சுதந்திரச் சதுக்கம்,

கொழும்பு 07.

04. விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரமானது அவர்களது திணைக்களத் தலைவருடாக வழங்கப்படுமென்பதுடன், 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறவில்லையெனின், அது தொடர்பில் திணைக்களத் தலைவருடாக, விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் மேற்கண்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

05. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சாட்சியங்களைச் சமர்ப்பித்தல் விண்ணப்பதாரர்களது கடமையாவதுடன், அதன்போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

எஸ்.டீ.ஏ.பீ.பொரலெஸ்ஸ
செயலாளர்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

2015 ஜூலை மாதம் 4 ஆந் திகதி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட வரவேற்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2015**

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம்<br>(அலுவலக பாவனைக்கு மட்டும்) | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்<br>சிங்களம் - 1 தமிழ் - 2<br>உரிய கட்டத்திற்குள் எழுதுக | ☐ |

1.0 தனிப்பட்ட தகவல்:

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
Mr.Mrs.Miss:…………………………………………………………………

1.2 முழுப் பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
……………………………………………………………………………………………

1.3 முழுப் பெயர்: (சிங்களத்தில்/தமிழில்)
……………………………………………………………………………………………

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 தொலைபேசி இலக்கம்: அலுவலகம்…………… தனிப்பட்ட:…………

2.0 சேவை பற்றிய தகவல்:

2.1 சேவை / பதவி:…………………………

2.2 நிறுவனத்தின் பெயர்:…………………………

2.3 அலுவலக முகவரி (பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்புவதற்காக):………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……

2.4 மேற்கண்ட பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:……………………………………

2.5 2015.06.19ஆந் திகதிக்கு முழு சேவைக்காலம் வருடம்:…… மாதம்:………

3.0 பரீட்சை பற்றிய தகவல்:

3.1 இதற்கு முன்னர் பரீட்சைக்கு தேற்றியிருப்பின்,
பரீட்சை இலக்கம் ☐ புள்ளி ☐

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும், விண்ணப்பப்பத்திரத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை உண்டு எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளரால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

....................................

திகதி:.........................                                        விண்ணப்பதாரியின் கையொப்பம்

4. திணைக்களத் தலைவரின் சிபாரிசு:-

இவ்விபரங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரருக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகள் உள்ளதெனவும், அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமை உள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்துக)